www.tamilarangam.net

# புரட்சிக் கவிதைகள்..



— சா.மு. பரஞ்சோதி பாண்டியன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புரட்சிக் கவி விதைகள்

ஆசிரியர்

சா.மு. பரஞ்சோதி பாண்டியன்

SEELAN BOOKS ★ NORWAY ★
SIGNATURE

*பிரியம் பதிப்பகம்*
1/73 அஞ்சலகச் சாலை,
துறைப்பாக்கம்
சென்னை - 600 096.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதல் பதிப்பு - 1997
உரிமை ஆசிரியருக்கே !

விலை - ரூ. 20

*செயிண்ட் ஜூடு டைப்போகிராப்*
சென்னை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# படையல்........



## சகோ. கே. ஜே. ஜார்ஜ்

ஆறு ஆண்டாய் இப்பள்ளியினை
அறிவே அரணாகக் கொண்டு
ஆறுபோல் தேங்காமல் நேரோடி
ஆற்றலுள்ள பள்ளி யாக்கியவரே !
**"உமக்கு என் அன்புப் படையல்"**

www.tamilarangam.net

வணங்குவது அல்ல ! தமிழ் மொழிக்கு அணிசேர்க்கும் படைப்புகளை தரும் ஆர்வலர்களை ஆதரித்து அவர்களுக்கு ஊக்கம் தருவதே தமிழ்த் தொண்டாகும்.

இளங்கவிஞன் பரஞ்சோதி பாண்டியன் தன்னை ஈடுபடுத்தி உள்ள இலக்கியத் துறையின் மூலம் தமிழுக்கு ஆற்றும் தொண்டு, இந்த நல் இளைஞனுக்கு தமிழ்நேயர்களின் உள்ளங்களில் ஒரு இடம் நிச்சயம் உண்டு.

அன்புடன்

**சின்னராசு**

வசந்தம் ஆசிரியர்
தினகரன் நாளிதழ்

www.tamilarangam.net

# அணிந்துரை

**இனமான நடிகர் எம்.ஏ. கிரிதரன்**
திராவிடர் கழக பேச்சாளர்
திராவிடர் கழக சென்னை மாவட்ட அமைப்பாளர்
தந்தை பெரியார் சமூகக்காப்பு அணி
இணை இயக்குனர்

"வேரில் பழுத்த பலா" என்று போற்றத்தக்க அளவிற்கு இந்த பிஞ்சு எழுத்தாளர் தன் பதினைந்து வயதில் கவிதை எழுத ஆர்வம் கொண்டவர். பதினைந்து வயதல்லவா ? காதலைப்பற்றி எழுதியிருக்கலாம் அல்லது சினிமா நடிகர், நடிகைகள் பற்றி எழுதியிருக்கலாம். இல்லையென்றால் புராணப் புளுகு மூட்டையாம் கடவுள்ர்களைப்பற்றி எழுதியிருக்கலாம். ஆனால், ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அந்த பிஞ்சு உள்ளத்தில் "மனிதர்களாகப் பிறந்தும் மிருகமாக நடத்தப்பட்டு உரிமை மறுக்கப்பட்டு கிடந்த இந்த சமுதாயத்தின் உரிமைக்காக பாடுபட்ட தந்தைப் பெரியாரைப் பற்றி" எழுதவேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் உதித்தது என்றால் அது இனிப்பான "பலா" தான். ஆம் அந்த பிஞ்சு

www.tamilarangam.net

தான் சா.மு. பரஞ்ஜோதி பாண்டியன். இவர் எழுதிய முதல் தொகுப்பு "தொண்டு செய்து பழுத்த பழம்" இல்லையில்லை. அது அவர் பெரியாருக்கு செலுத்திய காணிக்கை. அந்த வரிசையில் இரண்டாவதாக படைக்கவிருப்பதுதான் உங்கள் கைகளில் தவழும் "புரட்சிக் கவி விதைகள்". இதில் இவர் நம் - தம் தாய்மொழியாம் தமிழைப்பற்றி பாடுகிறார். தமிழுக்கு கேடு செய்வோரை சாடுகிறார் தமிழ்த்தாய்க்கு துன்பம் நேரும்போது வாடுகிறார் !.

நம்முடைய தமிழர் தலைவர் அய்யா வீரமணி அவர்கள் சாதி சண்டையைத் தூண்டிவிடும் அரசியல்வாதிகளைப் பற்றி குறிப்பிடும்போது திராவிடர் கழகம் சாதியை அறவே ஒழிக்கவேண்டும் என்று கருதுகிற இயக்கம் அதாவது கொசு உற்பத்தியையே ஒழிக்கவேண்டும் என்று கருதுபவர் நாம். ஆனால் கொசு இருந்தால்தான் தாம் பிழைக்கமுடியும் என்று எண்ணும் ''கொசு வர்த்தி வியாபாரி'' களைப் போன்றவர் அரசியல்வாதிகள்" - என்றார். மொழி உணர்விலும் அப்படிப்பட்ட அரசியல்வாதிகளை இந்த இளம் எழுத்தாளர் சாடுகிறார்.

www.tamilarangam.net

அம்மட்டோ ! குழந்தைத் தொழிலாளர் நிலையை எண்ணிக் கண்ணீர் வடிக்கிறார். பெண்ணுரிமைக்காகவும் குரல் கொடுக்கிறார். "மலர்கின்ற மலர்களை மலத்தினால் மூடலாமா" என்று நாவரசன் கொலைக்காக கொதித்து எழுகிறார். தலைவர்கள் சிலை உடைப்பையும் சாதிச்சண்டையையும் காரி உமிழ்கிறார். திரைப்பித்து பிடித்த மாந்தரைச் சாத்து, சாத்தென்று சாத்துகிறார். "விபச்சாரியின் மகன்" என்று வேதங்கள் சொன்னாலும் கோவிலுக்குச் செல்பவன் - சுரணையற்ற தமிழன்" - என்றும்

''ஐந்தாண்டுக்கு ஒருமுறை வரும் பிச்சைக்காரன்'' என்று சட்டமன்ற உறுப்பினரையும் சாடுவது இவரின் வீரம் கலந்த விவேகத்தை காட்டுகிறது. சாமியார்களைப்பற்றி "துறவு வேடம் அணிந்த மேஜிக்-மேன்கள்" என்று இவர் விமர்சிப்பது நகைச்சுவையுடன் ஊன்றிய கருத்தாகும்.

ஆம், இவரது படைப்புகளை இவரது வயதையும் நினைவில் கொண்டு - பிரமிப்பு ஏற்படுத்துகிற வண்ணம் இவரது பிஞ்சு உள்ளத்தில் ஏற்பட்டிருக்கிற மொழியுணர்வு, இனயுணர்வு, உரிமையுணர்வு, பகுத்தறிவுச்

www.tamilarangam.net

சிந்தனை இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக இவரிடம் உள்ள தன்னம்பிக்கை, துணிவு, முயற்சி ஆகியவை நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

ஆக, இவரது இந்த படைப்பை அனைவரும் வாங்கி படிப்பதின் மூலமாக தாமும் நல்லுணர்வுப் பெற்று இந்த இளம் சிந்தனையாளரையும் ஊக்குவித்து, இதன் மூலம் நாமும் "சுரணை உள்ள தமிழன்" என்று நிலைநாட்டுவோமே.

இவண்

**எம்.ஏ. கிரிதரன்**

www.tamilarangam.net

# என்னுரை

இன்று தமிழகத்தில் தமிழர்களே தமிழை இருட்டடிப்பு செய்கிறார்கள் ! தமிழர்களே தமிழை இரண்டாம் நிலைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். வாழ்ந்திருந்த தமிழ் வீழ்ந்திருப்பதை கண்கூடாக காண்கிறோம் ! இதையெல்லாம் காண்கின்றபொழுது, நெஞ்சுக்குள் வெடித்து சிதறியவையே இந்தக் கவிதைகள்.

நாட்டின் ஒவ்வொரு பிரச்சினையிலும் சற்று அதிகமாகவே தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை மறுக்க முடியாது. தமிழன் அடிபடுவதும், உதைபடுவதும் என்னை சற்று அதிகமாகவே பாதித்தது. அவையும் கண்ணீர்க் கவிதைகளாக ஈங்கு ஈந்துள்ளேன்.

எனக்கு அறிவுப் பிழை ஏராளம் ! ஏராளம் ! மேலும் கவிதையிலும் பிழை இருக்கலாம். பாடல்களில் கருத்தையே முன்னிறுத்துவதால் கவிநயம் சற்று பின்வாங்கியுள்ளது என்பதை தெளிவாக அறிகிறேன். இருந்தும் என் கவிதைகளை அச்சிட்டு வெளியிடவேண்டும் என்ற உள்ளக் கிடக்கையால் இச்சிறு நூலை என் பதிப்பகத்திலேயே வெளியிடுகின்றேன்.

நான்கு வார்த்தை தொடர்ந்து தமிழில் பேசினால் அவனை வித்தியாசமாக பார்க்கும் நிலை

www.tamilarangam.net

நாட்டில் உள்ளது. இந்த நிலையில் தமிழ் என்றும் தமிழர் என்றும் கவிதைகள் எழுதியுள்ளேன். எனவே, அனைவரும் ஆதரவு தாரீர் என வேண்டுகின்றேன்.

இந்த நூலில் உள்ள ஒவ்வொரு ஏடும் என் உழைப்பைச் சொல்லும் ! ஆம் ! வளமனையில் வாழ்பவன் அல்ல நான் ! வறுமைக் குடியில் உழல்பவன். இருந்தாலும் நூல் வெளியிடும் ஆர்வத்தால் நிதி கூட்டி வெளியிடுகிறேன்.

இந்த நூல் வெளியிடவும் எனக்குப் பக்கபலமாக இருப்பவர்களையும் இங்கு சுட்டிக்காட்டுவது நன்று என நான் நினைக்கின்றேன் முதலில் எம்பள்ளி முதல்வர் சகோதரர் கே.ஜே. ஜார்ஜ் .அவர்களுக்கும், எம் தந்தையார் திரு. கு. முத்தையா அவர்களுக்கும், என்றும் எனக்கு பேராதரவு அளித்துவரும் திருமதி. கா. டிவோட்டா அவர்களுக்கும் பக்கபலமாக இருக்கும் திரு. ஜான் ஆப் தி கிராஸ் அவர்களுக்கும் என் நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

மேலும், இந்நூலுக்கு அணிந்துரை அளித்த திருவாளர். சின்னராசு அவர்களுக்கும் என் பணிவான நன்றியினை தெரிவிக்கின்றேன். பாராட்டுரை அளித்த இனமான நடிகர் எம்.ஏ. கிரிதரன் அவர்களுக்கும் என்னைப் பற்றி எழுதியுள்ள நண்பர் ஜான் ரிச்சர்ட் அவர்களுக்கும் நன்றியினை உரித்தாக்குகிறேன்.

www.tamilarangam.net

மேலும், ஒவ்வொரு பணியிலும் அஸ்திவாரமாக இருந்துகொண்டு என்னை கலசமாக வெளியில் தெரிய வைத்துக்கொண்டிருக்கும் தகைமையாளர் திரு. அன்செலம் ரோஜர் அவர்களுக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கும் பாதம் பணிகின்றேன். அவரே இந்நூலுக்கு ஓவியங்கள் தீட்டியுள்ளார் என்பதை பெருமையுடன் நவில்கின்றேன்.

இறுதியாக தோளோடு தோள் கொடுத்து நிற்கும் நண்பர்கள், கு. செந்தில்குமார், அஜித், தணிகாசலம், அவர்களுக்கும் உதவிக்கரம் நீட்டிய கார்த்திக், மார்க் டேவிட், சுந்தரராமன், சுதாகர், கௌதமன், ரூபன், அவர்களுக்கும் என் சகோதரர் ஞானசேகர பாண்டியனுக்கும் என் நன்றியை முன்வைக்கின்றான். மேலும், துறைப்பாக்கம் தாய்த் தமிழ் மன்றத்திற்கும் சமூக சேவகர் திரு. சூரியா அவர்களுக்கும் நன்றியினை கூறுகின்றேன்.

**சா.மு. பரஞ்சோதி பாண்டியன்**



www.tamilarangam.net



**சா.மு. பரஞ்சோதி பாண்டியனின்** முந்தைய படைப்பான "**தொண்டு செய்து பழுத்த பழம்**" என்ற நூலிற்காக திராவிட கழக தலைவர் **கி. வீரமணி** அவர்கள் **அழைத்துப் பாராட்டி** "**ஆயிரம் ரூபாய்**" உடைய பணமுடிப்பை அன்பளிப்பாக அளித்தார்.

www.tamilarangam.net




என்னுயிர் தமிழே !
உன் நிலையை
நினையும் பொழுதே !
கண்களில் குருதி சுரக்கிறது !

உன்னால்...... உன்பேரைச் சொல்லி
அரசியலார் அரசியல் நடத்துகிறார்கள்..........
உனக்கெதுவும் செய்தபாடில்லை........... செய்ய
வில்லையெனில் மன்னிக்கலாம்.
உன்னைத்தான் அழிக்கத்தான்
ஆள்கிறார்கள்..... என்ன செய்வது !

www.tamilarangam.net

நீ வாழ்ந்திருந்த காலம்
சங்க காலம் !
நீ தாழ்ந்திருக்கும்
காலம் எங்க காலம் !

உன்னை மொழிச் சிதைவு
செய்யும் பொழுது
என் விழி அல்லவா
சிதைந்துபோகிறது !

என் தாய் மொழியாம்
தமிழ் மொழி
தமிழ் நாட்டைவிட்டு
மறையுமாயின் மறுகணமே
என் யாக்கைவிட்டு
என்னாவி அகலும் !

என்னுயிர் மொழியே
நீ வாழ்க ! வாழ்க !
பலகோடி பல்லாண்டு
நீ வாழ்கவே !

www.tamilarangam.net




என் தமிழே !
அன்பும் நீயே !
அறிவும் நீயே !
பண்பும் நீயே !
அழகும் நீயே !
கவியும் நீயே !
கவிவளமும் நீயே !

www.tamilarangam.net

வெற்றியும் நீயே !
வெற்றிமுரசும் நீயே !
வீரமும் நீயே !
வீரவாளும் நீயே !
தீரமும் நீயே !
தீர நெஞ்சமும் நீயே !

இன்பம் நீயே !
இன்ப யாழும் நீயே !
என் விழியும் நீயே !
அதனொளியும் நீயே !
என்னிதயம் நீயே !
அதனொலியும் நீயே !

பேரும் நீயே !
புகழும் நீயே !
என்மெய்யும் நீயே !
அதனசைவும் நீயே !
தமிழே
என்னுயிரும் நீயே !
மொத்தத்தில் அனைத்தும் நீயே !

www.tamilarangam.net

## 3. தமிழ்த்தாய் பேசுகிறாள் !

*அன்புத் தமிழா !*
நான் தென் பொதிகையில் பிறந்தவள் !
கவின்மிகு மென்மலர்போல் மணப்பவள் !

அறிஞர் ஏட்டில் மகிழ்ந்தவள் !
கண் பறித்திடும் தமிழ்க் கலையுடையவள் !



www.tamilarangam.net

தென்றலிலே தெளிந்த தமிழாய் மிதந்தவள் !
சான்றோர்கள் செவிப் புகுந்தவள் !

மூவேந்தர் மனம் கவர்ந்து முக்கழக பீடத்தில்
முடி சூடா அரசியாய் இருந்தவள் !

***இன்றோ !***
மனம் தளர்ந்து நறு"மணம்" குறைந்து
வளவனின் வளம் இழந்து !
சேரனின் சிறப்பழிந்து !
மீனுடை மன்னனின் பெருமை இழந்து
இந்நாளில் ....!

அரசியல்வாதியின் கைப்பாவையாய் !
அழகு தமிழ்பேசி, அரசியலார் பிழைக்கிறார் !
நானோ அழிகின்றேன் !

ஒளிபுகழ் மறைந்து மணிமுடி கவிழ்ந்து
ஆதரவற்று நிற்கின்றேன் !

என்புகழ் திரும்ப
மணிமுடி நிமிர நறுமணம்
கமழ செயலாற்ற மாட்டாயோ
தமிழா !

www.tamilarangam.net

# 4. வள்ளுவன் செய்த தவறு !

முப்பால் தந்தவனே ! ....
அப்பாலை தமிழிலே
ஏன் செய்தாய் ?

இப்பகுதியில் பிறந்ததனால்
ஈங்குள்ளவனே ! குறள் மறந்து
உனை மதிக்கவில்லையே !

தப்பென்று உணரவில்லையா ?
தமிழ்நாட்டில் பிறந்து
தமிழினிலே எழுதினாயே !

உப்பிட்டுதான் உண்கிறான்
உன்தலைமுறைகள் ஆனால் சுரணையற்று
உண்மையறியாமல் இருக்கின்றோம் !

பழைய மொழியுள் ஒன்றான
இலத்தீனில் படைத்திருந்தால்
இந்நேரம் மறைவேதமெல்லாம்

www.tamilarangam.net

பிழைக்க வழியற்று
போயிருக்கும் ! ரோம
ராச்சியத்தில் உன்பெயரும்

தழைத்திருக்கும், உன்
கருத்தெல்லாம் கற்கின்ற
கல்வியாளர் மட்டுமின்றி

உழைக்கின்ற பாட்டாளி
மன்பதைகளும் அறிந்து
வாழ்ந்திட முனைவரே !

சமக்கிருதத்தில் எழுதியிருந்தால்
கண்ணனின் கீதையைவிட்டுவிட்டு
உன்னை தலையில் தூக்கி வைத்து

சுமந்து கொண் டிருப்பர்
இங்குள்ள மேல்குடிகள் !
இன்று இந்தியாவில்

உமக்கென்று தனியிடமும்
நாட்டுச் சின்னத்தில்
இடம்பெற்று இருக்கும்

கமழ்கின்ற தமிழினிலே எழுதி
கருவிழந்து உருவிழந்து
களையிழந்து நிற்கிறாயே !

www.tamilarangam.net

## 5. தாயே ! தமிழே !

தாயே தமிழே உனைப்புகழ
தயக்கம்தான் நீயிருக்கும் நிலைநினைத்தால் !
காயே ஆனாலும் கனிபோல
குறித்திடுவர் அயலவரவர் மொழியை !
தாயே உனைப்போல் பிறர்க்கொரு
தண்மொழி வாய்த்திட்டால் ! பிறர் நமைபார்த்து
நாய்போன்றவர்களே ! எங்கள் மொழிதான்
நலிவில்லா நல்மொழியென நவில்வரே !

வெண்ணிலவுபோல் ஒளிர்ந்தவளின்று
வெங்கொடுமையால் தேய்ந் திடுவதா !
கண்ணில் மணியென பார்க்ககடவர்கள்
கதியிலாமல் இருக்கச் செய்வதா !
தண்ணீர் கலந்த பாலன்ன
தண்தமிழில் ஆங்கிலம் கலப்பதா !
கண்ணீர் பெருகுதடா ! தாயே !
தமிழே ! உனை நினைக்கையிலே !

அம்மாவென்று அழைத்தவாய் "மம்மி"யென்று
அழைப்பதா ! சிந்தித்தல் நன்றாம் !
விம்முகின்ற குழந்தையை "பேபி"யென்று
விளம்புவதா ? யோசிப்பீரே !

www.tamilarangam.net

தும்முகின்றபோதும் நாம் துணிவுடனே
தமிழென்று தும்முதல் வேண்டும் !
சம்மட்டியால் அடித்தல் வேண்டும்
செந்தமிழை பழிப் பவனை !

நெஞ்சு பதைக்குது நினைத்தாலே !
நல்தமிழுக்கு கலைச்சொற்கள்
இலையென்றாலே !
அஞ்சி அலறவேண்டாமா ! உன் தாய்க்கு
அணிய ஆடை இலையென்றாலே !
கஞ்சி குடிக்க வழியிலையென்றாலும்
கருத்துடனும் மானத்துடனும் வாழ்தல் நன்றாம் !
பஞ்சினைப் போல் வெண்மனம்
படைத்தவர் சாக்கடை மனமாகலாமா !

தமிழுணர்வு கொள்ளல் வேண்டும் !
தனித் தமிழை பேசவேண்டும் !
குமிழ் தோன்றி மறைவதுபோல்
குன்றி விடுதல்ல நந்தமிழ் !
தமிழ் அன்னையை அகிலத்தில்
தூக்கி நிறுத்துவோம் ! பழிப்பானை
உமிழ்ந்திட்டு ! உவகையுடன் தமிழை
உயர்த்திட செய்தல் வேண்டும் !

www.tamilarangam.net

## 6. என் ஆசை நிறைவேற வேண்டும் !

வீதியெங்கும் தமிழ்ப் பெயரே இருக்கவேண்டும்
வழிக்குறிகள் யாவும் தமிழிலேயே
இருக்கவேண்டும்!
சாதிமறந்து தமிழரென்ற நோக்கினிலே
ஒன்றாகுதல் வேண்டும் !
செந்தமிழில் அறிவியல்யாவும் செழித்தோங்க
வேண்டும் !
நீதிமன்ற பேச்செல்லாம் தமிழிலேயே இருத்தல்
வேண்டும் !
நட்புடனே அனைத்துலகமும் தமிழரிடம் இருத்தல்
வேண்டும் !
வேதியர் மொழியெல்லாம் தமிழைக்கண்டு
பின்வாங்குதல் வேண்டும் !
வேலையாற்றும் பாட்டாளிக்கு தமிழார்வம்
வளர்க்கவேண்டும் !

படிக்கின்ற கல்வியெல்லாம் தமிழிலேயே
இருக்கவேண்டும் !

www.tamilarangam.net

படைகளெல்லாம் தமிழ்காக்கும் படைகள் ஆகவேண்டும் !

வடிக்கின்ற அமுதைப்போல் ஆங்கிலத்தை வடித்தல்வேண்டும்!

வரலாறுயாவும் தமிழர்கள் அறிதல்வேண்டும் !

வெடிக்கின்ற ஆயுதம் யாவும் தமிழர்தாய் இருக்கவேண்டும் !

விளையாட்டுத்துறைதனிலே தமிழர்கள் முன்னிற்கவேண்டும் !

துடிக்கின்ற ஈழத்தமிழரெல்லாம் நிம்மதி பெறவேண்டும் !

தென்றமிழ் வெகுவிரைவில் உலகாள வேண்டும்!

திசையெல்லாம் தமிழ் பரவ வழி செய்யவேண்டும்!

தமிழரெல்லாம் தனித்தமிழ் பேசி மகிழ்தல் வேண்டும் !

இசையெல்லாம் தமிழிசையாய் கேட்கவேண்டும்!

இல்லையென்று வந்தார்க்கு தமிழர் வள்ளல் ஆகவேண்டும் !

வசைபாடும் கும்பலை தமிழர் மன்னித்தல்வேண்டும் !

www.tamilarangam.net

வளந்தமிழை திட்டினால் அவனுயிரூசலாட

செய்தல் வேண்டும் !

விசையெல்லாம்

தமிழச்கே அர்ப்பணிக்கவேண்டும் !

வல்லரசென்று தமிழகம் பெயர்வாங்க வேண்டும்!

விண்ணுலகம் முழுவதும் தமிழருலா

வரவேண்டும் !

விஞ்ஞான புதுமைகள் தமிழர் அறிதல்வேண்டும்!

மண்ணுலகம் எல்லாமே ஆய்வு செய்ய

வேண்டும் !

மூடநம்பிக்கைகளை தமிழர்கள் அறுத்தெரிய

வேண்டும் !

கண்போன்றே நம் தமிழை காத்தல் வேண்டும் !

கடையெல்லாம் தமிழ்ப்பேராய் இருத்தல்

வேண்டும் !

எண்ணெல்லாம் தமிழெண்ணாய் பயன்படுத்தல்

வேண்டும் !

என் ஆசையெல்லாம் நிறைவேற வேண்டும் !

www.tamilarangam.net

## 7, மாணவர்களே !

புத்தகச் சுமைகளை சுமந்து புத்தியை
வித்தகம் செய்யாமல்
இருக்கும் மாணவர்காள் !
சிந்திப்பீர் சிறிதே !

தமிழ்நாட்டில் தாய்மொழியாம்
தமிழ்மொழி, ஆட்சிமொழியாக இல்லை !
பேச்சு மொழியாக இல்லை !
பயிற்றுமொழியாக இல்லை !
தமிழ்நாட்டில் இசையில்லை !
தமிழ் ஏட்டில் கருத்தில்லை !
தமிழ்நாட்டில் வளமில்லை !
எனக் கூக்குரல்
எழுப்பும் மனிதர்களின் எலும்பை நொறுக்க
வேண்டாவா ?

அங்காடி பெயர்களை தமிழினிலே
வைத்தால் வியாபாரம் குறையுமாம் !
"ஸ்வீட்" என்றால் இனிக்கிறதாம் !
தமிழினிலே "இனிப்பென்றால்" கசக்கிறதா !

www.tamilarangam.net

தமிழருக்கு தமிழ்பேச கூசுகிறது !
இதையெண்ணி மக்கள் மனம்
கூசவேண்டாமோ ?

மாணவர்க்கெல்லாம் முதற்பணி
தமிழ்ப்பணியே ! நாமெல்லாம்
அணி அணியா திரள்வோம் !
தமிழ் கூட்டத்தினில் புரள்வோம் !

தமிழினை போற்றவே
கூட்டங்களை கூட்டி
வாட்டங்களை ஓட்டி
புரட்சிக்கு அணியமாவோம் !

**நத்தை வேகம் !**

ஐம்பத்தாறில் மொழிவாரி மாநிலம் பிரிக்கப்பட்டது
தொண்ணூற்றேழில்தான்
ஒன்று முதல் ஐந்துவரை
உள்ள வகுப்புகளுக்கு கட்டாய
தமிழ்க்கல்வி ............ !

www.tamilarangam.net

## 8. தமிழிசை இல்லையா !

இசையின் பெருவிழா
ஒன்று இனிதாக
நடந்தது ..............
அவ்விழாவில் பல்லிசை
கலைஞர்களும், பன்மொழி
இசைஞர்களும் தத்தம்
மாநிலை மொழி
இசையினை பாடினர் .................

பஞ்சாபி இசைஞன்
பாங்குடனே பஞ்சாபி
மொழியிலேயே இசை நிகழ்த்தி
மகிழ்ச்சி அடையச் செய்தான் ....... !

வங்காளி தோன்றி
வங்கமொழியிலேயே
தங்கமான இசையை
அனைவருக்கும் அளித்திட்டான் !

www.tamilarangam.net

குஜராத்தி வந்தான்
கருத்தான பாடலை
குஜராத்தி மொழியிலேயே
பாடிவிட்டு சென்றான் ............

காஷ்மீரி வந்து
உருதினிலே உருக்கமுடன்
பாடி பாராட்டை பெற்றிட்டான் !

இந்திக்காரன் வந்தான்
இந்தியிலேயே பாடி
புகழ்வாங்கி சென்றான் !.....

தெலுங்கன் தோன்றி
தெலுங்கிசையை பாடி
தென்றலாய் சென்றான் !

பின்பு கன்னடன் வந்து
கர்நாடக சங்கீதம் பாடி
களிப்புடனே சென்றான் !

www.tamilarangam.net

மலையாளி ஒருவன்
மலையாள கீதம்
இசைத்து அனைவரையும்
மலைக்கவைத்து சென்றான் !

இறுதியிலே தமிழ்நாடு
சார்பாக தமிழன்
வந்தான் !
அவன் பாடியது தமிழாக
இருக்கவேண்டும் .................. ஆனால்

அழகாக தெலுங்கிசையைப்
பாடி பாராட்டு பெற்றான்
அவரவர் தாய்மொழியிலேயே
பாட தமிழன் மட்டும் வேற்று
மொழியில் பாடுவதேனோ

அய்யகோ தமிழ்
மொழியில் தமிழிசை இல்லையா ?
கதிரில் ஒளியில்லையா ?
புதிருக்கு விடையில்லையா !
நிலவில் அழகில்லையா !
சிந்திப்பீரே !

www.tamilarangam.net

## 9. "தமிழரை பிடிக்காத கடவுள்"

கடவுளே !
தமிழர்களை உனக்கு பிடிக்காதோ !
எந்தமிழர்தான் கோயில் கட்டுகிறான் !
தமிழர்தான் சிற்பங்கள் வெட்டுகின்றான் !
பொருள்தனை அளிக்கின்றான் !
உடலுழைப்பை கொடுக்கிறான் ! இருந்தாலும்
அவனை கருவறைக்குள்
நுழைய விடமாட்டாய் என்கிறாய் !
அவ்விடத்தில் வேறொருவன்
வேண்டும் என்கிறாய் !

அடக்கடவுளே !
ஆண்டிமுதல்
அமைச்சர் வரை தீ
மிதிக்கிறோம் ! தால்தனிலே
வேல் குத்துறோம் !
மாட்டைப் போல கம்பிகுத்தி
முதுகினிலே தேரிழுக்கின்றோம் !
ஆனாலும்
உனக்கு எங்கள் தமிழ் மொழிதான்
வழிபாட்டினிலே
பிடிக்கவில்லையே !

www.tamilarangam.net

சமக்கிருதம் வேண்டும்
என்கிறாய் !
கடவுளே !
தமிழர்களை உனக்கு
பிடிக்காதோ !

## மக்களின் நம்பிக்கை

பிள்ளையார் பால்குடித்தார்
என்றால் நம்புவார்கள் ! ராமர்
பிள்ளை "கல்நெய்யை" மூலிகையிலிருந்து
கண்டுபிடித்தாரென்றால் நம்ப
மறுப்பார்கள் !

## தாளிகைகள்

தமிழனை "தாளிக்கும் கைகள்".

www.tamilarangam.net

# 10. புவி வாழ் தமிழர்களே புரட்சி எப்போது ?

புரட்சி என்பது
தமிழகத்தில் கிடையாதா ?
என்னத்தை செய்தாலும்
எண்ணத்தை தூண்டினாலும்
தமிழர் வாழ்வில் புரட்சி வந்து
புரளாதா !

நம் தமிழர்களை
கொத்து கொத்தாய்
கொத்தடிமையாய் ஏற்றிச்சென்று .............
தோட்டந்தனில்
ஆலைதனில் தமிழர்
குருதியுறிஞ்சி
உவகையுடன் வாழ்ந்தனரே !
வெள்ளையர் ! அப்பொழுதும்
தமிழகத்தில் புரட்சி
தோன்றவில்லை !

ஆப்பிரிக்காவின் தென்
பகுதியில் கறுப்பரோடு
கறுப்பராய் அடிமைகளாய்

www.tamilarangam.net

தமிழர்கள் வாழ்ந்த
போதிலும் ...............

"வள்ளியம்மை" என்ற
வீரத்தமிழச்சி
சிறைதனிலே உயிர்விட்ட
போதினிலும் புரட்சியொன்றும்
தமிழகத்தில்
பிறக்கவில்லை !

வீழ்ச்சியுறும் தமிழர்களை
ஒன்று சேர்த்து ...... மலேயாவில்
புரட்சியொன்று செய்திட்டான்
வீரன் கணபதி ....................
அவனுக்கு மாலையிட
மரணக் கயிற்றை
பரிசாக அளித்தார்கள்
முதலாளித்துவ வாதிகள் !
அப்பொழுதும் தமிழகத்தில்
புரட்சியொன்றும் வந்திடவில்லை !

மியன்மார் விடுதலை பெற்றவுடன் தமிழர் பலர்
வீடிழந்து பொருளிழந்து
தாயிழந்து தந்தையிழந்து
ஏதிலிகளாய் தாய்நாடு

www.tamilarangam.net

வந்தனரே ! அப்பொழுதும்
தமிழகத்தில் புரட்சியில்லை !

இப்பொழுதும் ஈழத்தினில்
துப்பாக்கி குண்டடி வாங்கி !
கழியுதை பெற்று வாழ வழியற்று ! நம்
சோதரர்கள்
தீதனிலே வேகிறார்கள் ..................

தாய்நாட்டிற்கும் திரும்ப
முடியாமல் ! பிழைப்பூரிலும்
இருக்க முடியாமல்
அலைமிகு கடலினிலே
மூழ்குகிறார்கள் ....................

பதிமூன்று ஆண்டுகளாய்
போராட்டம் ! போராட்டம் !
டாங்கிப் படைகள்தான்
அங்கு தேரோட்டம்
தமிழர் தலைகளை கறிகாய்
போல தமிழ்ப் பகைவர்கள்
வெட்டுகிறார்கள் ........

www.tamilarangam.net

இதையெல்லாம் அறிந்த
புவிவாழ் தமிழரெல்லாம்
குரல் கொடுத்து எதிர்க்க ..............

தமிழ்நாட்டில் வாழும்
தமிழர்மட்டும் வாய்திறக்கவில்லை ...... !
இன்னும் இங்கு புரட்சி வெடிக்கவில்லை !



## புகழ்ச்சி

புகழ்ச்சி
அது இதமான தென்றல் காற்று !
மனிதனின் வாழ்க்கை .....................
அது பதமான "தீதீபம்"
தென்றல் மென்மையாக வீசினால்,
தீபம் சற்று அதிகமாக பிரகாசிக்கும் .........
தென்றல் பலமாக வீசினால் தீபம்
அணைந்து விடும்.

www.tamilarangam.net

## 11. வாகைப் பூச்சூடுவாய் !

வெட்சிப் பூவணிந்து
போர் புரியும் ஈழ
மறவர்களே ! வீழப்
போவது மற்றான்தான் ! நீவிர்
விரைவிலேயே வாகைப் பூச்சூடுவீர் !


எதிராளியின் துமுக்கி
உன் நெஞ்சுக்கு நீண்டாலும் !
ஈழமங்கையரின் மார்பினிலே
"ஸ்ரீ" என்ற சின்னம் பொறித்தாலும்

ஈழத்தமிழரெல்லாம்
இறந்தாலும் ! ஒற்றைத் தமிழன்
உள்ளவரை போராட்டம்
ஓங்க வேண்டும் !

தமிழர் சிந்தும் ஒவ்வொரு
இரத்தம் ! வரலாற்றை
மாற்றும் நித்தம் !
வெட்சிப் பூவணிந்து
போர் புரியும் ஈழ
மறவர்களே ! வீழப்

www.tamilarangam.net

போவது மற்றான்தான் ! நீவிர்
விரைவிலேயே வாகைப் பூச்சூடுவீர் !



www.tamilarangam.net

## 12. தமிழா ! ஓ ! தமிழா !

தமிழரெல்லாம்
மும்பையிலே அடிபடுறான் !
கடை வச்சா தமிழர்
இடையொடிக்கிறான் !

பல மாநிலந்தனில்
தமிழர் பிழைக்கச் சென்று
சேரிதனில் ஈக்களுடன்
புழுவைப்போல் வாழ்கிறார்கள் !

அயல் மாநிலத்தவர்
வளமுடனே தமிழகத்தில்
வாழ்கிறார்கள் ! தமிழரெல்லாம்
வீழ்கிறார்கள் !

காவிரிநீர் தமிழனுக்கு
கானல் நீர் !
தவிச்ச வாய்க்கு நீரில்லை !
காய்ஞ்ச பயிருக்கும் வாழ்வில்லை !
தண்ணி கேட்டா சிரிக்கிறான் !
எதிர்த்து கேட்டால்
அங்கு வாழ்கின்ற
தமிழரெல்லாம் உதை

www.tamilarangam.net

வாங்குகிறான் ..........

சேரத்தினிலே ! தண்ணியெல்லாம்
வீணாக போய்ச்
சேருடதா கடலினிலே !
கொஞ்சம் "இங்கே திருப்பிவிடு"
என்றால் தமிழனுக்கு
தண்ணியில்லை என்றே
பறைகிறான் மலையாளி !

தெலுங்கனோ ! இப்பவரும்
அப்ப வரும் ! என்று கூறி
கிருஷ்ணா நீர்
கிடைக்காமல் செய்கிறான் !
ஆக மொத்தம் அனைவருமே
தமிழனையே வெறுக்கிறான் ....... !

இருந்தாலும் எந்தமிழனோ !
"இந்தியர் என்பதில்
பெருமிதம் கொள்வோம்" !
என்கிறான் ...... !

www.tamilarangam.net

## 13. ஒரு மீனவனின் புலம்பல் !

நான் தமிழ் மீனவன் ! கால்
ஊனம் ஆனவன் !
ஆழியிலே மீன் எடுக்க போனவன்
தாளிழந்து அருகதையற்று இருப்பவன் !



நடுக்கடலில் நலமுடனே
நனிமீன்கள் எடுத்தோம் !
நண்பர்களும் நவில்கின்றனர்
அற்புதம் ! மகிழ்ச்சியென ! .....

அந்தோ ! எங்கிருந்தோ
அயலவரின் கலன்கள் சுற்றி
வருகின்றது ............ வேடுவனொருவன்
மானைக்கண்டவுடன் சுடுவதுபோல்

www.tamilarangam.net

எங்கள் படகை பார்த்தவுடன்
படக்கென சுடுகிறான் !
எந்தமிழனோ அவனை
பாவமென விடுகிறான் !

எங்கள் அரசுக்கு மதியில்லை
எங்களுக்கு கதியில்லை
கடலில் கடத்தல் நடக்கும்
கொள்ளை பொருட்கள் கிடக்கும்

இவர்களை கடற்காவலர்
விட்டுவிடுவர் !
மீன்பிடிக்க செல்பவரை
வீணுக்கு சுட்டிடுவர் !

எங்களை காக்க
நாதியில்லை ! பிழைக்கத்தான்
வழியுமில்லை ! அந்தோ !
காற்றும் ! மழையும்தான்

ஆபத்தென்றால் !
அயலவரின் குண்டும்
அபாயம் ஆகுவது ஏனோ !
அயலவருக்கு கிடைத்தது
எங்கள் மீனினந்தானோ !

www.tamilarangam.net

## 14. "பெரியார் கூற்று"

கத்தி வைத்து,
மெய் கிழித்து,
"அறுவை சிகிச்சை" செய்து
பெறவில்லை எங்கள்
விடுதலையை !
எங்களின் விடுதலை
"சுகப்பிரசவம்தான் ........... ஆம் !
அறவ்ழியில் கிட்டியதுதான்
எங்களின் விடுதலை ......... !

விடுதலை எனும் குழந்தையை
உணவில்லாமல் தாய்ப்பால்
கொடுக்காமல் கொல்வது
போல் மக்களாட்சி என்னும்
சிக்கலாட்சி வைத்துக்கொண்டு
மக்கள் யாரும் பேச்சுரிமையற்று
ஒடுங்கும் வாழ்க்கை !
விடுதலையை கெடுதலை
ஆக்கி வருகின்றனர்

www.tamilarangam.net

அரசியல் வாதிகள் ..............
இப்பொழுதுதான் புரிகிறது
"பெரியாரின் கூற்று"
நாம் இன்னும் அடிமைகளே !
விடுதலை என்பது நமக்கல்ல !
அது மேல்குடியினருக்கு ! .... முன்பு
வெள்ளையனுக்கு அடிமை, இப்பொழுது
கொள்ளையனுக்கு அடிமை" என்னே
அவரின் தனியான சிந்தனை !



www.tamilarangam.net

## 15. உழைப்பாளி வாழ்க

பகட்டான பங்களா ! பளபளப்பு
பெருங்கோபுரம் ! பசும் பொன்
தகட்டான கூரையும் ! நாலைந்து
தண்பொருந்திய மகிழ்வுந்து ! சேலைகளோ
முகட்டுக்கு இணையாக ! சகட்டுக்கு
மணம் கமழும் அரண்மனையும்
திகட்டாமல் நனி செல்வந்தனை
தின்றழிக்கவே ஒரு கூட்டம் !

ஆடை அணியாமல், உயர்ந்த கல்வி
அறிவ றியாமல், புத்தக
வாடை நுகராமல் ! முவ்வேளையும்
வேண்டிய உணவில் லாமல் !
கூடையன்ன வீட்டில் தலை
குனிந்து செல்லும் நுழைவாயில் !
பாடை யும் தென்ன ஓலை தூங்கு
படுக்கையும் அவ்வோலையே எனவொரு
கூட்டம்!

பசிக்கின்ற ஒரு கூட்டம், அமுதை
பார்த்தறியா பெருங் கூட்டம் !
புசிக்கின்ற ஒருக்கூட்டம், தூக்கம்
பேணாத சிறு நரிக்கூட்டம் ! இவ்வாறு

www.tamilarangam.net

இலங்குகின்ற இத்தரையில் ! என்றுமே
இன்பவெள்ளம் இருக்காது ! உழைப்போர்
கலங்குகின்ற நாட்டில், எக்கணமும்
குருதி வெள்ளம் தோன்றிடுமே !

குழைந்திட்ட கமழ்தேய்வும் ! நறுமணப்
பூச்சுகளும்
குளிர்ந்திடும் சவ்வாது மணமும்
தழைக்கின்ற, இன்ப மணமல்ல ! இஃது
தொங்குதொப்பை முதலாளிகளின்
மெய்நாற்றம்
உழைப்பாளி உழைத்திட்ட போதினிலே
உகுக்கின்ற வியர்வை நீரால்
விழைகின்ற நாற்றம்தான் ! நல் நாற்றம்
மற்றதெல்லாம் வெறும் துர்நாற்றம் !


பாட்டாளி மக்களுக்கு பகுத்தறிவைகாட்டி
படிப்பாளி ஆக்கி, தொட்டாலே
தீட்டாளி என்பரையும் தலைநிமிரச்செய்து
தீஞ்சிபோன சனங்களை காத்திட்டு
கூட்டாளி ஆகிடுவோம் ! தொழில்
கூட்டும் முதலாளியிடம், இல்லையென்றால்
காட்டாளி ஆக்கிடுவோம் ! தின்று பெருத்த
கரு எருமைநிகர் முதலாளிகளை !

www.tamilarangam.net

## 16. "புரியும் உனக்கு" !

சிவக்கடவுளே !
விஷ்ணுக் கடவுளே !
புவிதனிலே ஒரு
தாழ்ந்தோனாய் பிறந்துவிடு ........

பின்பு பக்தனாக
உன்னாலயத்திற்கு சென்று
வணங்கிப் பாரேன் ! உனக்கே
நுழையும் உரிமையில்லாமல் போகும் !
நீ வாழும் தெருவுக்கு
உன் "சாமி"யின் தேரும்
வராமல் போகும் !
அப்பொழுதுதான்
பெரியாரின் பெருமை புரியும் !
அம்பேத்காரின் சிறப்பும் தெரியும் !



www.tamilarangam.net

## 17. மழலைப் பாட்டாளிகளே !

மழலைப் பாட்டாளிகளே !
திரும்பி வாருங்கள் !
கல்விச் சாலை காத்திருக்க
தொழிற்சாலை உனக்கெதற்கு ?
சாதனை செய்ய வாய்ப்பிருக்க
ராந்துசட்டி உனக்கெதற்கு ?
தூவல் பிடிக்கும் பிஞ்சுக்கரங்களில்
சுத்திப் பிடித்து உழைப்பதா ?

பூக்கள் தீக்குள் கருகலாமா ?
சந்தனம் சாக்கடையில் மூழ்கலாமா ?
புத்தகங்கள் சுமப்பவர்கள் சாக்கு
மூட்டையை சுமக்கலாமா ?
மழலைப் பாட்டாளிகளே
திரும்பி வாருங்கள் !

வேலையில்லா திண்டாட்டம் கொண்டாட்டம்
போலுள்ளது ! குழந்தைகளே ! உங்களுக்கு
வேலையே ஒரு திண்டாட்டம்.
மழலைப் பாட்டாளிகளே திரும்பி வாருங்கள் !
சாதனைப் படைக்க !

www.tamilarangam.net

## 18. கரிந்துபோன பெண்கள் !

கரிந்துபோன பெண்கள் !
நெருப்பில் எரிந்துபோன
பெண்கள் ! பலர் ! பலர் !
இந்நாட்டில் !
அதற்கெல்லாம் முடிவு
கண்டாச்சு ! என நினைக்கும்
வேளையிலே !



www.tamilarangam.net

புதிய அத்தியாயம்
தொடங்கியாச்சு ! "ரூப்கன்வர்"
என்ற மங்கையின் பெயரில் !
"சதிமாதாதேவிக்கு" ஒரு சதிபலி
கொடுத்தாச்சு !

"உயிருக்கு பயந்து சுடுகாட்டிருந்து
அப்பெண் ஓடிவர ! - தூக்கிவந்து நெருப்பில்
போட்டு கதற கதற துடிக்க சாவடித்தனரே
காட்டு மிராண்டிகள் "

நினைத்தாலே நெஞ்சு கொதிக்குது !
இந்துமதம் "கரிந்துபோன
பெண்களின் கண்ணீரால்
'ழவப்படுமா ?

இல்லை ! அந்த பெண்களின்
கண்ணீரில் வளருமா ?

இந்தப் பெண்ணே இறுதியாக
வேண்டும் ! இதற்கு மேலும்
ஒரு பெண்ணெரிந்தால் இவ்வுலகத்தை
இறுதியாக்க வேண்டும் !

www.tamilarangam.net

## 19. மாணவச் சமுதாயமே !

பால் போன்ற அகத்தினன்
பணிவான மாணவன்
வேல் போன்ற மதிகூர்மையான்
வெண்ணுளமுடைய நாவரசன்

சாந்தோமில் இருந்திட்டான்
சாந்தமுடன் இருந்திட்டான்
மாந்தரின் நல் வாழ்விலே
மாத்துன்பம் உயிர் அழிவே !

மலர்கின்ற மலர்களை
மலத்தினால் மூடலாமா ?
உலர்கின்ற வெண்துணிமேல்
கருஞ்சாயத்தை ஊற்றலாமா ?

வெடிக்கிறது நெஞ்சம் !
படிக்கின்ற வயதில்தான்
துடிக்கின்ற இளமையும்
அடிக்கின்ற திமிரும் வேண்டுமோ ?

கறிகாய் போல் நினைத்திட்டார்
கோலமிகு நாவரசனை

www.tamilarangam.net

வெறிநாய்கள், துண்டுதுண்டாக
வெட்டி அவனையே அழித்திட்டார் !

மாணவனை அறுத்ததுதான்
மாக்கொடுமை ! அறுத்தவனும்
மாணவன்தான் ! படித்திட்ட
கல்வியினை இதில்தானே காட்டிவிட்டான் !

கொலைச் செயலும் இழிச்
செயலும் அரசியலில்
இருந்ததுவே ! இதோ மாணவச்
சமுதாயத்தை மாலையிட வந்ததுவே !

தாழ்ந்த மாணவச் சமுதாயமே !
இச்செயல்கள் நிலைத்துவிட்டால்
வீழ்ந்த மானுடத்தைத் தூக்கி
விட யார்வருவார் சிந்திப்பீரே !

**சுரணையற்ற தமிழன்**

"விபச்சாரியின் மகன்"
என்று வேதங்கள்
சொன்னாலும் இந்தாலயத்திற்கு செல்பவன்.

www.tamilarangam.net

## 20. நட்பின் விளிம்பிலே

நண்பர்கள் நால்வர்
நலமுடனே வாழ்ந்தனர்
அவ்வூரில்....
அவர்கள் தோளோடு
தோளுரசும் பொழுது
வாளோடு வாளுரசும்
வீரம் வெளிப்படும்

கல்விதனிலே நால்வரும்
இளங்கலை முடித்தவர்கள்.
வீதிதனிலே ! ஓடந்தனிலே !
வயல்தனிலே ! அங்காடிதனிலே !
ஒன்றாக காட்சியளிப்பர்.

உண்மையிலே பிறர்
சந்தேகித்தது உண்டு, இவர்கள்
நால்வர் முதுகும் ஒட்டப்பட்டு
இருக்குமென ! அமைதியாக
இருந்தது அந்த ஊர்.
அந்த அமைதியூரில்

www.tamilarangam.net

கிளம்பியது "சாதிப்புயல்"
ஓரினத் தலைவனின் சிலையை
மற்ற இனத்தார் உடைப்பதும்,
மற்ற இனத்தின்
தலைவர் சிலையை
எதிரினத்தார் உடைப்பதும்
ஒருவர் மற்றொருவர்
தலையை வெட்டுவது
சாதாரண நிகழ்ச்சியானது
பேருந்துகள் எரிக்கப்பட்டன.
மின்சாரம் தடைபட்டன.
துப்பாக்கிச் சூடுகள் நடத்தினர்
காவலர்கள், எங்கும் பீதி
பயங்கரம்..........

நண்பர்கள் நால்வரில்
இருவர் ஓர் இனம் !
மற்ற இருவர் வேறோர் இனம் !
சாதியின் சாபம்
நண்பர்களையும் விட்டு
வைக்கவில்லை..............

www.tamilarangam.net


பலமாக தாக்கிக்கொண்டார்கள்.
இருந்தாலும் நட்பென்ற
இழையால் பிணைக்கப்பட்டு இருந்ததால்
சற்றுநேரங் கழித்து நடந்ததை
நினைத்து வருந்தினார்கள்.................

நால்வரும் சேர்ந்து
இந்த சா"தீ"யை
அணைக்க வேண்டும். இதற்கு
ஆதி மூலம் யாரென்று
ஆராய்ந்தனர்! ஊராய்ந்தனர் ........
இந்த கலவரத்திற்கு
காரணம் "ஊர்த்தலைவர்" என
விடைக் காண
நால்வரும் "ஊர்த்தலைவரையும்"
அவன் கையாட்களை
சேதாரம் இல்லாமல்
ஆதாரத்தோடு பிடித்து
காவலரிடம் ஒப்படைத்தனர்....
மக்களிடம் நல்கருத்துக்களை
நால்வருமே பரப்பினர்.

www.tamilarangam.net

பாழான சாதியை கோதி
விடுபவரை பாதியாக்கவேண்டும் என
முழக்கம் இட்டனர்.

சாதிக்கலவரம் அமுங்கியது, நால்வரும்
"நற்பணி மன்றம்" ஒன்றை
ஆரம்பித்து அவ்வூர் பிணியகல வளம்பெற
பணியாற்றினர்.



www.tamilarangam.net

## 21. தாழ்வை நோக்கிச் செல்லாதே :

தமிழா ! திரைப்படம்
என்ற மாய மயக்கத்தை
விட்டு தெளிந்து
வெளியே வா !

எத்தனை நாள் ! அரிதாரம்
பூசிய நாடகமாடிகளை
தலைவரென உரைப்பாய் !
திரையில் வருவது நிஜமென
எண்ணி "சங்கங்கள்" வைத்து
அறிவை இழப்பாய் !

பொழுதுபோக்காய் இருப்பதற்கு
காட்டும் வித்தைகளை உண்மையென
நம்பி விழுதுபோல் பற்றி
தொழுது வாழ்கிறாயே !

கூத்தாடிகள் சொன்னால்
செய்வதற்கு தயாராய்
இருக்கும் இளைஞர்களே !
தாய் தந்தையர் சொல்லை
செய்வதற்கு தயாராக இருக்கிறீரா !

www.tamilarangam.net

## 22. நம்பிக்கையிலே !

தோழா !
முகத்திலேன் வருத்தத்தை
ஏற்றுமதி செய்திருக்கிறாய் !

காலத்திற்க்கொவ்வாத
கல்வியிலே
தேர்ச்சி பெறவில்லையா !
அல்ல
உனைகண்டு சென்ற
காரிகையாள்
காலைவாரி விட்டாளா ?
அல்ல வாழ்வின் முக்கிய
பங்கு வகிக்கும் பணத்தால்
பிரச்சினையா ?

இவைகளா உன் பிரச்சினை ..............
இதனாலேயே விழுந்து விடுவதா .... ?
விழுந்து எழுவது அல்லவா வெற்றி !
சின்ன சின்ன சறுக்கல்களுக்கே
சோர்ந்துவிடுவதா ?

www.tamilarangam.net

உன் வாழ்க்கைப்
பாதையில் இமயமலையே
குறுக்கில் வந்து
நின்றாலும் ..............
நீ நினைத்தால்
உன் சுண்டுவிரலில்
ஒரு தட்டு தட்டினால்
இமயமலை சுக்கு நூறாகி
உனக்கு வழி கொடுக்கும்....
நீ துணிந்திட்டால்
பெரும் பாதாளம் கூட
சிறு பள்ளம் போலாகும் !
தயங்கினால்
எறும்புத்துளை கூட
பெரும் பாதாளமாக தெரியும்..

நண்பா ! செல் !
வாழ்விலே வேகமாகச் செல் !
சென்றுகொண்டே
இரு ! வருத்தத்தை பாரமாக
நினைக்காதே வெற்றியை
நோக்கி வேகமாகச் செல்

www.tamilarangam.net

## 23. புரட்சி எங்கே ?

தமிழகத்தில் புரட்சி ஒன்றும்
காணோம் !
தலைவர்கள் பெயர்கள்
மட்டும் புரட்சித்தலைவர்
புரட்சித் தலைவி, புரட்சித் தளபதி
புரட்சிப் புயல் ............... என !

### கோயிலில் ஒரு வாசகம் !

இது தமிழ்நாடு
இங்கே உள்ள ஆலயத்தில் "தமிழிலும் பூசை
செய்யப்படும்" என்ற
வாசகம்.

### சாமியார்கள்



துறவு உடையணிந்த
"மேஜிக் மேன்"கள்

www.tamilarangam.net

## 24. மரணமே !

மரணமே ! நீ மட்டும்தான்
உன் பணியினை
தெளிவாக நிலையாக
செய்கிறாய் !

உனை வெல்ல ஈங்கு
யாரும் இல்லை ! ஆனால்
சில நல்லோரை நீ
வென்றாலும் ! அவர்கள்
மக்கள் மனதை வென்று
இன்றும் வாழ்கிறார்கள் !

மரணமே ! நீ இருப்பதால்தான்
இன்றளவும் அதர்மங்கள்
தலைதூக்கவில்லை ! தர்மங்கள்
கீழ் சாயவில்லை !

மரணமே ! உனை மரணப்
படுக்கைக்கு அனுப்ப
அறிவியல் எனும் ஆயுதம்
ஏந்திவிட்டோம் நாங்கள் !

இன்றும் சிறிது நாளிலே
உனக்கு சங்கூத ஏற்பாடு செய்திடுவோம் !

www.tamilarangam.net

## ஆசிரியர் பற்றி .................



நண்பர் சா.மு. பரஞ்சோதி பாண்டியன் அவர்கள் எனது இனிய நண்பர். அவரின் கவி ஆர்வம், தமிழ் ஆர்வம், தமிழர் ஆர்வம், உலக ஆர்வம், அரசியல் ஆர்வம், தனிப் பாங்குடையது.

பதினொன்றாம் வகுப்பு படிக்கும் இவர் சாந்தோம் பள்ளியில் முன்னணி மாணவர்களில் ஒருவராக இருக்கிறார். இல்லத்தலைவராகவும், தமிழ் இலக்கியமன்ற பொதுக்குழு தலைவராகவும் பொறுப்பேற்றுள்ளார். அனைத்து ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். பொதுப் பணியிலும், புதுப் பணியிலும் அதிக ஆர்வமுடையவர். திருவான்மியூர் இளைஞர் எக்ஸ்னோராவில் இணைச்செயலாளராகவும், பெரம்பூர் குருளையர் இயக்கத்தில் **(Leo Club)** உறுப்பினர் சேர்க்கை இயக்குநராகவும் **(Membership Development Director)**, கொரமண்டல் சுழற்கழகத்தில் **(Rottary Club)** கலை இயக்குநராகவும் இருக்கிறார்.

இவர் எழுதிய **"புரட்சிக் கவி விதைகள்"** இவரின் இரண்டாவது படைப்பு. சென்ற ஆண்டு **"தொண்டு செய்து பழுத்த பழம்''** என்ற பெரியாரின் சிந்தனைகளை கவிமாலையாக்கி தந்தார். இவர் இனிய பேச்சாளர், நட்பாளர், எழுத்தாளர் இவர் கவிதை மட்டுமன்று கட்டுரை, கதை போன்றவற்றில் திறன் படைத்தவர்.

இவரின் எழுத்தார்வம் சமூகத்தைப் பற்றியே இருந்திருக்கிறது என்பதை நன்று கவனித்திருக்கிறேன். இவரின் சமுதாய அக்கறை மேன் மேலும் வளர வாழ்விலே தழைக்க மேலும் பல அறிய படைப்புகளை வெளிக்கொணர வாழ்த்துகிறேன்.

**இ. ஜான் ரிச்சர்ட்.**

தலைவர், பைகிராப்ட்ஸ் நற்பணி மன்றம்

www.tamilarangam.net

EELAN BOOKS
SIGNATURE
NORWAY

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்